REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 19 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வீட்டிலிருந்தவாறு மொபிடெல் உடன்
இணைந்து வேலை செய்யுங்கள்,
கல்வி பயிலுங்கள்

25GB ரூபா. 150/-
+ வரிகள்

செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #170#

*விசேடமாக தெரிவு செய்யப்பட்ட
பிளேட்போம்களுக்கு மட்டுமே

TRC/M/Promo/20/02


INTERNET 4G LTE

Sri Lanka Telecom Mobitel

வரு. 88 இல. 275 | November 19, Thursday, 2020 | 24 பக்கங்கள் | 30/-

மகாநாயக்க தேரரின்

## இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை



ராம்மாஞ்ஞ மஹா நிக்காயவின் மறைந்த மகாநாயக்க தேரர் வணக்கத்திற்குரிய நாபான பேமசிறி தேரரின் இறுதி கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய

06

## இனவாத கருத்துக்களை பரப்புவதற்கு சிறிதரன் போன்றோருக்கு இனி இடமில்லை

### அவரது கருத்துக்களை தமிழ் மக்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்கிறார் அனுர பிரியதர்ஷன யாப்பா



ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

இனவாதக் கருத்துக்களை பரப்புவதற்கு சிறிதரன் போன்றோருக்கு இனியும் இடம் கிடைக்காது. அதனை தமிழ் மக்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைதான் தேர்தல் முடிவுகளும் எடுத்துக் காட்டியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நடைபெற்றுவரும் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம்

06

## கொரோனாவுடன் மேலும் மூன்றரை வருடங்கள் வாழும் நிலை ஏற்படலாம்

### முழு நாட்டையும் முடக்கி வைத்திருக்க முடியாது




ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொவிட் தொற்றுடன் இன்னும் மூன்றரை வருடங்களுக்காவது வாழும் நிலைமை ஏற்படலாம். அதன் காரணமாக முழு நாட்டையும் தொடர்ந்து முடக்கி வைத்திருக்க முடியாது என சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை

06

# நாடு முகங்கொடுத்துள்ள அனைத்து சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்வோம்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாடு எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களையும் வெற்றிகொள்ள நாட்டு மக்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கிணங்க மக்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஒருபோதும் வெல்ல முடியாது என்ற பயங்கரவாத யுத்தத்தை அனைவரதும் ஒத்துழைப்புடன் வெற்றிகொள்ள முடிந்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி நாடு எதிர்கொள்ள கூடிய அனைத்து சவால்களையும் மக்கள் ஒத்துழைப்புடன் வெற்றிகொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

நாட்டைப் பாதுகாப்பதே மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக இருந்தது குறுகிய காலப்பகுதியில் அதனை நாம் நிறைவேற்றியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று ஒரு வருட பூர்த்தியையொட்டி நேற்றைய தினம் தொலைக்காட்சி ஊடாக அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் அரசியலமைப்புக்கு



முன்னிட்டு குடும்பத்தினர் சகிதம் கேக் வெட்டி கொண்டாடிய போது பிடிக்கப்பட்ட படம்.




தமது வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக்க

## வெலிக்கடை சிறைச்சாலை எ கூரை மீது ஏறி எதிர்ப்பு தெரி

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் சிலர் கூரை மீதேறி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களின் வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கோரியே கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். விளக்கமறியல் சிறையில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலரே இவ்வாறு எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளதாக

06




ட்சம் பிகள் கியது




கிழக்கு ஆசிய பிராந்திய அலுவலகம் ஆகியன இணைந்து கொரோனா கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு இலட்சம் துரித ஆன்டிஜன் பரிசோ ன கருவிகளை வழங்கியுள்ளன. த்துடன், எதிர்வரும் வாரங்களில் மேலும் ஒரு இலட்சம் துரித ஆன்டிஜன் பரிசோதனை கருவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. அமெரிக்காவைச்

06

## சுயபொருளாதாரத்தை வலுப்படுத்தும் பட்ஜட்



சுயபொருளாதாரக் கொள்கையை வலுப்படுத்தும் வகையில் வரவு செலவு திட்டம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

06




## தனிமைப்படுத்தப்பட்டிருந்த கைதிகள் ஐவர் சிறையிலிருந்து தப்பியோட்டம்

ஒருவர் பலி; மற்றொருவர் தலைமறைவு; ஏனையோர் கைது

எம்.ஏ. அமீனுல்லா

கண்டியில் உள்ள பழைய போகம்பறை சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொரோனா தொற்றுடைய 5 சந்தேக நபர்கள் நேற்று (18) அதிகாலை 1.00 மணியளவில் சிறைச்சாலையிலிருந்து தப்பிக்க முயன்ற போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

06

## சுகாதார துறைக்கு பதிலாக பாதுகாப்பு துறைக்கு அதிக நிதி


சபையில் சிறிதரன் எம்.பி கவலை தெரிவிப்பு



ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

கொவிட் 19 நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துள்ள சூழலில் சுகாதாரத்துறைக்கு

06



சபையில் இராதாகிருஷ்ணன் MP விளக்கம்

## ஆயிரம் ரூபா சம்பளம் எப்படி அமைய வேண்டும்

ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

ஆயிரம் ரூபா நாட் சம்பளம் அடிப்படை சம்பளமாகவும் நிபந்தனையற்றதாகவும் இருக்க வேண்டும். தவிர மொத்த கூட்டுத்தொகை

06

## மனைவியை பெட்ரோல் ஊற்றி கொலை செய்தவருக்கு மரண தண்டனை

திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் நேற்று தீர்ப்பு

றொட்டவெவ குறூப் நிருபர்



காதலர் தினத்தன்று தனது மனைவியை பெட்ரோல் ஊற்றி தீ வைத்து கொலை செய்த குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

## மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க எவரது அனுமதியும் தேவையில்லை

ஊடக சந்திப்பில் M.K.சிவாஜிலிங்கம்



நவம்பர் 27 மாவீரர் தின நினைவேந்தலை மேற்கொள்வதற்கு நாம் யாரிடமும் அனுமதிபெற தேவையில்லை என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்

## வீடுகளிலிருந்து வெளியே வந்தால் கடும் நடவடிக்கை

பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவிப்பு



தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் தங்களின் வீடுகளில் இருந்து வெளியில் சென்றால் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.



ஐந்து ரூபா கூட்ட வக்கில்லாதவை ஆயிரம் ரூபாவை விமர்சிக்கலாமா?? என்ன சொல்லுறீங்க?